**மாவட்ட நீதிமன்றம், உதகமண்டலம்**

O.S. No. 7 of 2020

பெயர் : Safia Kadher Moideen

D.W. 1

13.10.2025

**பி.வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் High School வரை படித்துள்ளேன். தாவா 1வது பட்டியல் சொத்தை என் அப்பா 1995ஆம் ஆண்டு வாங்கினார். 2ஆம் பிரதிவாதி ஜமிளா என்ற பேபி என் தங்கை ஆகும். வாதிகளும், 3ஆம் பிரதிவாதியும் என் சகோதரர்கள் ஆவார்கள். 4ஆம் பிரதிவாதி சகிலா என் அண்ணன் சத்தாரின் மனைவி, 5 மற்றும் 6ஆம் பிரதிவாதிகள் அவர்கள் குழந்தைகள் ஆகும். வாதிகள் இவ்வழக்கை 2020ஆம் ஆண்டு தாக்கல் செய்தபோது நான் சென்னையில்தான் வசித்து வந்தேன். தற்போதும் நான் சென்னையில்தான் வசித்து வருகிறேன் என்று சொன்னால், ஆமாம்.

2. தாவா 1வது பட்டியல் சொத்திற்கு அருகே எனக்கு சொந்தமான ஒரு வீடு இருக்கிறது என்று சொன்னால், ஆமாம். தாவா 1வது பட்டியல் சொத்தை என் அப்பா 1995ஆம் ஆண்டு வாங்கியபோது அதில் 3 தளங்கள் இருந்தன. தாவா 1வது பட்டியல் சொத்தை என் அப்பா 1995ஆம் ஆண்டு வாங்கியபோது அதில்

கீழ் தளம் மற்றும் முதல் தளம் மட்டும்தான் இருந்தன என்று சொன்னால், சரியில்லை, கடைகளும் இருந்தன. என் தகப்பனார் அலாவுதின் 1997ஆம் ஆண்டு பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு புது கட்டிடம் கட்டினார். என் கணவர் Agricultural Engineer ஆகும், அவர் அரசு வேலையில் இருந்தார். என் கணவர் அரசாங்க வேலையில் இருந்ததால் அவர் பல ஊர்களுக்கு பணி மாறுதலில் சென்றார், ஆனால் நான் அவ்வாறு அவரோடு பல ஊர்களுக்கு செல்லவில்லை. நான் என் கணவரோடு பல ஊர்களுக்கு செல்லவில்லை என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால், சரியில்லை.

3. என் தகப்பனார் என்ன படித்திருந்தார் என்று கேட்டால், அவர் படிக்கவில்லை. என் அப்பா தாவா 1வது பட்டியல் சொத்தை 1995ஆம் ஆண்டு வாங்கியபோது சிறியதாக ஒரு கடை வைத்திருந்தார். எனக்கு 1984ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. என் அப்பா 2017ஆம் ஆண்டு இறந்துபோனார், அப்போது அவருக்கு 80 வயதிற்கு மேல் இருக்கும். என் அப்பா எப்படி இறந்துபோனார் என்று கேட்டால், அவருக்கு 2017ஆம் ஆண்டு நுரையீரல் புற்றுநோய் வந்து இறந்துபோனார். என் அப்பா இறப்பதற்கு 15 வருடங்களுக்கு முன்பிருந்தே நீரிழிவு நோயாளியாக இருந்தார் என்று சொன்னால், சரியில்லை. என் அப்பாவிற்கு அவருடைய 70 வயதிலிருந்து நீரிழிவு நோய் இருந்தது என்றும், நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால், சரியில்லை.

4. என்னிடம் காண்பிக்கப்படும் Exhibit B1 Settlement பத்திரத்தில் என் அப்பாவிற்கு அப்போது 74 வயது என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால், ஆமாம். Exhibit B1 Settlement பத்திரம் 30.3.2009ஆம் தேதி எழுதப்பட்டது என்று சொன்னால், ஆமாம். Exhibit B1 Settlement பத்திரத்தில் இருக்கும் சொத்துதான் இவ்வழக்கின் தாவா 1வது பட்டியல் சொத்து என்று சொன்னால், ஆமாம்.

5. Exhibit B1 Settlement பத்திரத்தை யார் தயார் செய்தது என்று கேட்டால், ஊட்டியில் இருந்த வழக்கறிஞர் திரு. பிரபு தயார் செய்தார். வாதிகள் இவ்வழக்கை எங்கள்மீது தாக்கல் செய்தபோது எனக்காக அதே வழக்கறிஞர் திரு. பிரபு தான் ஆஜரானார் என்று சொன்னால், ஆமாம். தற்போது வழக்கறிஞர் திரு. பிரபு இறந்துவிட்டார், தற்போது இவ்வழக்கில் அவருடைய இளம் வழக்கறிஞர்தான் எனக்காக ஆஜராகிறார் என்று சொன்னால், ஆமாம். Exhibit B1 Settlement பத்திரத்தை எழுதுவதற்கு ஊட்டிக்கு வந்து வழக்கறிஞர் திரு. பிரபுவிடம் யார் விவரங்கள் சொன்னது என்று கேட்டால், என் அப்பாதான் சொன்னார். 2009ஆம்ஆண்டு Exhibit B1 Settlement பத்திரத்தை எழுதியபோது என் அப்பாவிற்கு உடம்பு சரியில்லாமல் இருந்தது, அதனால் அவரால் ஊட்டிக்கு வரமுடியாத நிலையில் இருந்தார் என்று சொன்னால், சரியில்லை, நல்லாதான் இருந்தார்.

6. தாவா 1வது பட்டியல் சொத்து கீழ் தளம், முதல் தளம், இரண்டாவது தளம் மற்றும் மூன்றாவது தளத்தை கொண்டது என்று சொன்னால், ஆமாம்.

7. 2009ஆம் ஆண்டு என் அப்பாவிற்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தது என்றும், அப்போது நான் என் அப்பாவிடம் தாவா 1வது பட்டியல் சொத்தை பராமரிக்க வேண்டும், அதற்கு பவர் பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும் என்று சொல்லி, அவரை அழைத்து சென்று அவரை ஏமாற்றி Exhibit B1 Settlement பத்திரத்தை எழுதி வாங்கினேன் என்று சொன்னால், சரியில்லை. என் தகப்பனார் படிக்காதவர் என்பதால் அவருக்கு Exhibit B1 பத்திரத்தில் என்ன எழுதியிருக்கிறது என்பதே தெரியாது என்று சொன்னால், சரியில்லை. எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது, நான் தமிழ் மீடியத்தில்தான் படித்தேன். Exhibit B1 Settlement பத்திரத்தில் என் தகப்பனார் மற்ற வாரிசுகளுக்கு சொத்து கொடுத்துவிட்டதாக அல்லது மற்ற வாரிசுகளுக்கு ஏன் சொத்து கொடுக்கவில்லை என்ற வாசகங்கள் இருக்கிறதா என்று கேட்டால், அதில் அவர் வேறு யாருக்கும் சொத்து கொடுக்கவில்லை. Exhibit B1 Settlement பத்திரத்தில் என் தகப்பனார் மற்ற வாரிசுகளுக்கு சொத்துக்களை கொடுத்துவிட்டதாகவும் அல்லது ஏன் கொடுக்கவில்லை என்ற வாசகங்கள் இல்லை என்று சொன்னால், ஆமாம்.

8. Exhibit B1 Settlement பத்திரத்தில் வழக்கறிஞர் திரு.ரெய்னியாவும், ஒரு பாத்திமா என்பவரும் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள். Exhibit B1 Settlement பத்திரத்தின் 1வது சாட்சியான பாத்திமா என் சகோதரரான 3ஆம் பிரதிவாதி முகமது அனிபாவின் மனைவி என்று சொன்னால், ஆமாம். அந்த பாத்திமா என்ன படித்துள்ளார் என்று கேட்டால், தெரியவில்லை. அந்த பாத்திமாவும் படிக்காதவர் என்றும், அவருக்கும் Exhibit B1 பத்திரத்தில் என்ன எழுதியிருக்கிறது என்பதே தெரியாது என்று சொன்னால், சரியில்லை, அவருக்கு தெரியும். Exhibit B1 Settlement பத்திரத்தின் 2வது சாட்சியான திரு.ரெய்னியா சாண்டி வழக்கறிஞர் திரு.பிரபுவின் இளம் வழக்கறிஞர் என்று சொன்னால், ஆமாம். Exhibit B1 Settlement பத்திரத்தின் இரண்டு சாட்சிகளையும் நான் என் தரப்பில் விசாரிக்க தயாராக உள்ளேனா என்று கேட்டால், விசாரிக்கிறேன். என் அப்பா விவரம் தெரிந்தே Exhibit B1 settlement பத்திரத்தை எழுதியிருந்தால் அவருக்கு தெரிந்தவர்களையோ அல்லது அவரது உறவினர்களையோதான் அதில் சாட்சிகளாக போட்டிருப்பார் என்று சொன்னால், அப்படி சொல்வது தவறாகும்.

9. என் அப்பா 2009ஆம் ஆண்டு Exhibit B1 Settlement பத்திரத்தை எழுதியபோது தாவா 1வது பட்டியல் சொத்தில் மொத்தம் 11 வாடகைதாரர்கள் இருந்தார்கள். என் எதிர்வழக்குரையின் 3வது பத்தியில் Exhibit B1 Settlement பத்திரம்

எழுதியவுடன் அதில் கண்ட சொத்தின்வசம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டதாக கூறியுள்ளேன் என்று சொன்னால், சரிதான். தாவா 1வது பட்டியல் சொத்தின் 3வது மாடியில்தான் என் அப்பா குடியிருந்தார் என்று சொன்னால், ஆமாம்.

10. என் அப்பா Exhibit B1 Settlement பத்திரத்தை எனக்கு எழுதி கொடுத்த பிறகு அதில் இருக்கும் 11 வாடகைதாரர்களுக்கு அவர் அச்சொத்தை எனக்கு எழுதி கொடுத்துவிட்டதால் இனிமேல் அவர்கள் என்னிடம்தான் வாடகையை செலுத்த வேண்டும் என்று அறிவிப்பு அனுப்பினாரா என்று கேட்டால், அனுப்பவில்லை. நான் என் அப்பாவை ஏமாற்றி பவர் பத்திரம் வாங்குவதாக கூறி Exhibit B1 Settlement பத்திரத்தை அவரிடம் எழுதி வாங்கிக்கொண்டேன் என்றும், அதனால்தான் அவர் மேற்கூறியவாறு வாடகைதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பவில்லை என்றும், அதனால் Exhibit B1 Settlement பத்திரம் நடைமுறைக்கே வரவில்லை என்று சொன்னால், சரியில்லை.

11. என் அப்பா என்ன சிறிய கடை வைத்திருந்தார் என்று கேட்டால், அவர் முதலில் வெள்ளி நகை கடை வைத்திருந்தார், பிறகு அதோடு சேர்த்து தங்க நகை கடையும் வைத்திருந்தார். என் அப்பா வெள்ளி மற்றும் தங்க நகை கடை வைத்திருந்தால் அது சம்பந்தமான ஆவணங்களை வீட்டில் வைத்திருப்பார் என்று சொன்னால், தெரியவில்லை. என் அப்பா வெள்ளி மற்றும் தங்க நகை கடை வைக்கவில்லை என்றும், நான் அப்படி

வைத்திருந்ததாக தவறான சங்கதியை கூறுகிறேன் என்று சொன்னால், சரியில்லை. என் அப்பாவிற்கு தாவா 1வது பட்டியல் சொத்தின் வாடகை வருமானத்தை தவிர வேறு வருமானம் இல்லை என்று சொன்னால், ஆமாம்.

12. என் அப்பா கரூர்வைசியா பேங்க் குன்னூர் கிளையில் பணத்தை டெபாசிட் செய்ததற்கான 7 டெபாசிட் ரசீதுகளை Exhibit B6 வரிசையாக நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், ஆமாம். வாதி Exhibit B6 வரிசை டெபாசிட் ரசீதுகளின் தொகைகளையும், என் அப்பாவின் சேமிப்பு கணக்கில் உள்ள தொகைகளையும்தான் தாவா 2வது பட்டியல் சொத்தாக இவ்வழக்கில் சேர்த்துள்ளார் என்று சொன்னால், ஆமாம். Exhibit B6 வரிசை டெபாசிட் ரசீதுகளின்கீழ் என் அப்பா 2016 ஆண்டு பணத்தை டெபாசிட் செய்துள்ளார் என்று சொன்னால், ஆமாம். தாவா 2வது பட்டியல் சொத்தின்கீழ் Exhibit B6 வரிசை டெபாசிட் ரசீதுகளின் மொத்த தொகையாக ரூபாய் 55,59,896.52 காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால், ஆமாம். மேற்கூறிய ரூபாய் 55,59,896.52ஐ என் அப்பா 2009ஆம் ஆண்டில் இருந்து 2016 ஆண்டுவரை வாடகையில் இருந்து வந்த தொகையை வைத்துதான் டெபாசிட் செய்துள்ளார் என்று சொன்னால், ஆமாம், வாடகை மற்றும் அட்வான்ஸ் தொகையை வைத்து டெபாசிட் செய்தார். Exhibit B1 Settlement பத்திரத்தை எழுதிய பிறகும் என் அப்பாவே வாடகையை வாங்கி வந்ததால், Exhibit B1 Settlement

பத்திரம் நடைமுறைக்கே வரவில்லை என்று சொன்னால், நான்தான் வாடகையை வாங்கி என் அப்பாவிடம் கொடுத்து வந்தேன்.

13. 1ஆம் வாதி அபிபுல்லா என்ன தொழில் செய்து வருகிறார் என்று கேட்டால், அவர் பேங்கில் மேனேஜராக இருந்தார். 1ஆம் வாதி எந்த ஆண்டு பணி ஓய்வு பெற்றார் என்பது எனக்கு தெரியாது. தற்போது 1ஆம் வாதி 10 ஆண்டுகளாக குன்னூரில் கிப்ட் ஷாப் நடத்தி வருவது தெரியுமா என்று கேட்டால், தெரியும். தாவா 1வது பட்டியல் சொத்தின் கீழ் தளத்தில் என் அப்பா இறப்பதற்கு முன்பிருந்தே 1ஆம் வாதி 2017ஆம் ஆண்டுமுதல் கிப்ட் ஷாப்பிற்கு குடோனாக பயன்படுத்தி வருகிறார் என்று சொன்னால், சரியில்லை. தாவா 1ஆம் ஐட்டச்சொத்தின் கீழ் தளத்தில் யார் வாடகைதாரர் என்று கேட்டால், அதில் அனிபா என்பவரை என் அப்பா வாடகைதாரராக வைத்தார். என்னுடைய எதிர்வழக்குரையில் 15வது பத்தியில் தாவா 1வது ஐட்டச்சொத்தின் கீழ் தளத்தில் 1ஆம் வாதி வசத்தில் இருப்பதாக நான் கூறியுள்ளேன் என்று சொன்னால், 2018ஆம் ஆண்டுமுதல் வாடகை கொடுப்பதாக சொல்லி 1ஆம் வாதி அங்கிருக்கிறார். என் எதிர்வழக்குரையில் நான் அதுபோல் 2018ஆம் ஆண்டில் இருந்துதான் 1ஆம் வாதி அங்கிருக்கிறார் என்று குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்று கேட்டால், 1ஆம் வாதி என் சகோதரர் என்பதால் கூறவில்லை. நான் என் எதிர்வழக்குரையில் 15வது

பத்தியில் 1ஆம் வாதி தாவா 1வது பட்டியல் சொத்தின் கீழ் தளத்தில் மாதம் ரூபாய் 7,000/- வாடகைக்கு அதில் 1ஆம் வாதி வாடகைதாரராக இருக்கிறார் என்றும், ஆனால் அவர் அந்த வாடகையை கொடுக்கவில்லை என்றும் கூறியுள்ளேன், அப்படி இருக்கும்போது நான் ஏன் 1ஆம் வாதிமீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்டால், நடவடிக்கை எடுக்கவில்லை.

14. தாவா 1வது பட்டியல் சொத்தின் 3வது தளத்தில் யார் இருக்கிறார் என்று கேட்டால், என் சகோதரர் 1ஆம் வாதி அபிபுல்லாவிற்கு தெரிந்தவர் வாடகைதாரராக இருக்கிறார், அவர் எனக்கு வாடகை கொடுத்து வருகிறார். தாவா 1வது பட்டியல் சொத்தின் 3வது தளத்தில் யார் வாடகைதாரராக இருக்கிறார் என்று அவர் பெயரே எனக்கு தெரியவில்லை என்று சொன்னால், சரியில்லை, அவர் பெயர் தீனா பிரேம்குமார் ஆகும், அவருடனான வாடகை ஒப்பந்தம் என்னிடம் இருக்கிறது. நான் பொய் சொல்கிறேன் என்றும், தாவா 1வது பட்டியல் சொத்தின் 3வது தளத்தில் பிளோமினா மேரி என்பவர்தான் வாதிகளின் வாடகைதாரராக இருக்கிறார் என்று சொன்னால், சரியில்லை.

15. என் அம்மா 26.1.2018ஆம் தேதி இறந்துபோனார். என் தாயார் இறந்தபிறகு 6 மாதங்கள் கழித்து 2018ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம், தாவா 1வது மற்றும் 2வது பட்டியல் சொத்துக்களை பிரிப்பதற்கு எங்கள் குடும்பத்தில் ஒரு பேச்சு வார்த்தை நடந்தது என்று சொன்னால், நடக்கவில்லை. நான்

பொய் சொல்கிறேன் என்றும், எங்கள் குடும்பத்தில் நடந்த கூட்டத்தில் நானும், 2ஆம் பிரதிவாதி ஜமிலாவும் தாவா 1வது பட்டியல் சொத்தை எங்கள் 4 சகோதரர்களுக்கு கொடுப்பதாக ஒப்புக்கொண்டோம் என்று சொன்னால், சரியில்லை. மறுபடியும் அதை என் சகோதரர்கள் கேட்ட பிறகுதான் நான் இதுபோல் Exhibit B1 Settlement பத்திரம் இருப்பதாக அவர்களிடம் கூறினேன் என்று சொன்னால், சரியில்லை.

17. என் அப்பா அலாவுதின் குன்னூரில் உள்ள Lebbai Sunnath Jamath Madrassaya Manba Uss Sallihath Paribalana Sabaவில் உறுப்பினர் என்று சொன்னால், ஆமாம். நான் மேற்கூறிய சபாவில் உறுப்பினர் இல்லை, ஆனால் என் சகோதரர்கள் அந்த சபாவில் உறுப்பினர்களா என்பது எனக்கு தெரியாது. எங்கள் சமூகத்தில் நாங்கள் ஜமாத்தின் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டவர்கள் என்று சொன்னால், உண்மையாக இருந்தால் கட்டுப்படுவோம்.

18. Exhibit B1 Settlement பத்திரத்திற்கு பிறகு ஜமாத்தார்களிடம் என் அப்பா தாவா 1 மற்றும் 2வது பட்டியல் சொத்துக்களை அவருடைய பெண் மக்களுக்கும், 4 ஆண் மக்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று சொல்லியுள்ளார் என்று சொன்னால், சரியில்லை, என் அப்பா அப்படி சொல்லவில்லை. என் அப்பா ஜமாத்தாரர்களிடம் என் சொன்னாரோ அதைதான் ஜமாத்தாரர்கள் Exhibit A6ல் எழுதி கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால், சரியில்லை. ஜமாத்தார்கள் என்னையும், என் சகோதரர்களையும்

அழைத்து பேசியபோது நான் அவர்களிடம் என் சகோதரர்களுக்கு எழுதி கொடுப்பதாக ஒப்புக்கொண்டேன் என்று சொன்னால், சரியில்லை, அதுபோல் மீட்டிங் நடக்கவே இல்லை. தாவா 2வது பட்டியல் சொத்தை பிரித்து கொடுப்பதற்கும் நான் ஒத்துக்கொண்டேன் என்று சொன்னால், சரியில்லை.

19. வாதிகள் 1.4.2019ஆம் தேதி என்னை அனுகி எழுதி கொடுக்க சொல்லி கேட்டபோதும் கூட, நான் எழுதி கொடுக்க முன் வரவில்லை என்று சொன்னால், அவர்கள் கேட்கவே இல்லை. அதன்பிறகு நான் தாவா 1வது பட்டியல் சொத்தை விற்க முயற்சி செய்ததால்தான் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்தார்கள் என்று சொன்னால், சரியில்லை, அவர்கள் கேட்கவே இல்லை. நான் என் பெயருக்கு தாக்கல் செய்துள்ள Exhibit B2 சிட்டா மற்றும் Exhibit B3 வரிசை சொத்து வரி ரசீதுகள் வாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால், அப்படி சொல்வது தவறாகும். நான் எதற்காக என்னுடைய பாஸ்போர்ட் நகலை Exhibit B7ஆக தாக்கல் செய்தேன் என்று கேட்டால், வாதிகள் 2018ஆம் ஆண்டு மீட்டிங் போட்டதாக கூறுகிறார்கள், ஆனால் அப்போது நான் U.K.வில் இருந்தேன். அதற்கான குறிப்பு எதுவும் Exhibit B7ல் இல்லை என்று சொன்னால், சரியில்லை, இருக்கிறது.

20. Exhibit B6 வரிசை வங்கி வைப்பீடு ரசீதுகளில் என் அப்பா என்னைதான் நாமினியாக நியமித்துள்ளார் என்று சொன்னால், ஆமாம். அதன்பிறகு 2017ஆம் ஆண்டு என் அப்பா அந்த

நாமினேசன் அனைத்தையும் ரத்து செய்தார் என்று சொன்னால், ஆமாம். நான் பவர் பத்திரம் என்று சொல்லி என் அப்பாவிடம் அவரை ஏமாற்றி Exhibit B1 Settlement பத்திரம் எழுதி வாங்கியதால்தான் என்மீது உள்ள அதிருப்தி காரணமாக என் அப்பா அந்த நாமினேசன்சை ரத்து செய்தார் என்று சொன்னால், சரியில்லை. என் அப்பா இறந்த பிறகும், என் அம்மா இறந்த பிறகும் தாவா 1வது பட்டியல் சொத்து வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் கூட்டு சுவாதீனத்தில்தான் இருக்கிறது என்று சொன்னால், சரியில்லை.

21. என் அப்பா குன்னுரில் வசித்து வந்ததால், குன்னுரிலேயே நிறைய வழக்கறிஞர்கள் இருப்பதால், என் அப்பாவிற்கு எனக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்திருந்தால், குன்னுர் வழக்கறிஞரை வைத்தே செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதியிருப்பார் என்றும், அதற்காக ஊட்டி வரை வந்திருக்க மாட்டார் என்று சொன்னால், என் அப்பா கீழ் தளத்தில் இருந்தவர் காலி செய்யாததால் அவர் மீது வழக்கு போட்டு, அந்த வழக்கு ஊட்டி நீதிமன்றம் வரை நடந்தது என்பதாலும், என் அப்பாவிற்கு ஊட்டி வழக்கறிஞர் திரு.பிரபு நல்ல பழக்கம் என்பதால் அவர் மூலம் செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதினார். என் அப்பா நடத்தியதாக சொல்லும் வழக்கின் விவரம் தெரியுமா என்று கேட்டால், இல்லை, தெரியாது.

22. Exhibit B1 Settlement பத்திரம் நடைமுறைக்கே வரவில்லை என்பதால் தாவா சொத்துக்களில் வாதிகள் கேட்ட பாகம் அவர்களுக்கு கிடைக்கதக்கது என்று சொன்னால், சரியில்லை.

N. MURALIDHARAN

Digitally signed by N. MURALIDHARAN
Date: 2025.10.14 15:31:04 +0530